ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்

வேணு : 4 | ஆகஸ்ட் 1998 | கானம் : 1

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 ஆகஸ்ட் 1998 கானம் : 1

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 33 | 5 |
| 3. | வேணு கீதம் - தொடர்ச்சி | 7 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 14 | 10 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 12 |
| 6. | வேத கதைகள் - 15 | 13 |
| 7. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 5 | 15 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 3 | 19 |
| 9. | நமது சிந்தனைக்கு - தொடர்ச்சி | 22 |
| 10. | பாலகர்களுக்கு ஒரு கதை - 10 | 25 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 36 | 28 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 30 |



திருஅரிமேய விண்ணகரம் குடமாடும் கூத்தர் ஸம்ப்ரோக்ஷண தினத்தன்று
நம் ஸ்வாமிகளுடன் கலஶ தீர்த்தம் ஏந்திய யஜ்ஞாபதிகள்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

## கிளிக்கண்ணி

பல்லவி

*குருநாதன் வாழீ! குருநாதன் வாழீ!*
*குருநாதன் வாழியவே! கிளியே! (குருநாதன்)*

சரணங்கள்

*பாகவத அமுதூட்டி பவபயம் போக்கிடும்,*
*பரம தயாளனடி! கிளியே! (குருநாதன்)*

*ஹரி நாம கீர்த்தனமே ஸரியான வழியென்று,*
*பரிவுடன் உரைப்பாரடி! கிளியே! (குருநாதன்)*

*கண்ணனின் ஸேவையில் தன்னையே மறந்திடுவார்*
*தன்னிகரில்லாதவர்! கிளியே! (குருநாதன்)*


*ஸாதுக்கள் ஸங்கத்தையே எங்கும் நிலவச் செய்து*
*ஸன்மார்க்கம் தழைக்க வந்தார்! கிளியே! (குருநாதன்)*

*பண்டரீநாதனின் பரம பக்தர் இவர்*
*முரளீதரனுடன் பணிவாய்! கிளியே! (குருநாதன்)*

அறிவிப்பு : 1. 'மதுரமுரளி' இரண்டாண்டு இதழ்கள், (July '95 - July'97) இரண்டு பாகங்களில் Bind செய்யப்பட்டு வெளி வந்துள்ளன.

2. 'மதுரமுரளி' மூன்றாம் ஆண்டு இதழ்கள் 'August '97 - July '98' தனி பாகமாக வெளி வந்துள்ளது.

இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.



# 33

மதுரமுரளி ஆகஸ்ட் '97 இதழில், நம் ஸ்வாமிகள் சீர்காழியை அடுத்துள்ள திருநாங்கூர் திவ்யதேசங்களுக்கு விஜயம் செய்தது பற்றியும் அந்த கோவில்களின் க்ஷீணமான நிலைமை பற்றியும் எழுதியிருந்தது நினைவிருக்கலாம். அந்த திவ்யதேசப் பெருமாள் ஒவ்வொருவரும் ஸ்வாமிகளின் கண்முன் தோன்றுவது போலவும், பேசுவது போலவும் ஸ்வாமிகளுக்கு ஸ்வப்னம் ஏற்பட்டதைப் பற்றியும் குறிப்பிட்டேன். இதைத் தொடர்ந்து குடமாடும்கூத்தர் பெருமாள் கோவிலுக்கு உபகாரங்களை - மாதந்தோறும் புஷ்ப கைங்கர்யத்திற்கும் நந்தவனத்திற்கும் ஏற்பாடு செய்தார். அதைத் தொடர்ந்து ராஜகோபுரம், பெருமாள், தாயார், ராமர், ஆண்டாள், கருடன் ஸன்னதி விமானங்கள், மண்டபங்கள், தளவரிசைகள், திருமதில்கள் ஆகியவை சிறப்புற திருப்பணி செய்யப்பெற்று பகுதான்ய வருஷம் ஆனி மாதம் 22ஆம் தேதி ஜுலை 6-ந்தேதி திங்கட்கிழமை காலை 6-7க்குள் அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்ய தீர்மானித்து ஸ்ரீ ஸ்வாமிகளின் மேற்பார்வையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ஜுலை 3-ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு அங்குரார்ப்பணம், வேத, திவ்யப்ரபந்த பாராயண தொடக்கத்துடன், பாஞ்சராத்ர ஆகம பாஸ்த்ர விதிப்படி ஹோமக்ரியைகள் தொடங்கப்பட்டன. பதினொரு யாக குண்டங்கள் அமைக்கப்பட்டன.

இந்த வைபவத்திற்கு சென்னை ப்ரேமிகபவனத்திலிருந்து ஜுலை 5-ஆம் தேதி, 'பாக்யமுள்ளோர்களான' ஸத்ஸங்கத்தினர்கள் இரண்டு பேருந்துகளில் புறப்பட்டு, திருநகரி சென்றடைந்தனர். அன்று மாலை 6 மணியளவில், ஸ்ரீதேவி, பூதேவி உடன் ஸ்ரீ சதுர்புஜகோபாலன் 108 கலச திருமஞ்சனம் கண்டருளினார். அன்று இரவு ''ப்ரஹ்லாத சரித்ரம்'' என்ற தலைப்பில் பொம்மலாட்டம் நடைபெற்றது.

திங்களன்று காலை 5 மணிக்கு, விஸ்வரூபம், கும்பமண்டல பூஜை, பூர்ணாஹுதி, யாத்ராதானம், க்ருஹப்ரீதி, தசதானம், கும்ப உத்தாபனம் முதலியன முடிந்த பிறகு ஸ்ரீ சதுர்புஜ கோபாலன், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார்களுடன் புறப்பாடு கண்டருளினார். பிறகு 6 மணி அளவில், மிதுனலக்னத்தில், மஹாஸம்ப்ரோக்ஷணம், பக்தர்களின் ஹரிநாம ஸங்கீர்த்தனத்துடன் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் இனிதே நடைபெற்றது. இக்காட்சியைக் கண்ட ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு, பெருமாள் தன் அவ்யாஜ க்ருபையாலே, ஸ்வாமிகள் மூலம் இத்திருப்பணியை நடத்திக் கொண்டதை நினைத்து ஸ்ரீ ஸ்வாமிகளின் கண்களில் ஆனந்த கண்ணீரே வந்துவிட்டது.

ஸம்ப்ரோக்ஷணத்தை முன்னிட்டு, கிராமவாஸிகளுக்கு ப்ரஸாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன. அன்று மாலை ஸ்ரீ ஸ்வாமிகள், பாடசாலை வித்யார்த்திகளுடனும், ஸத்ஸங்கத்தினருடனும் நாமஸங்கீர்த்தனம் செய்தார். தொடர்ந்து செதலபதி ஸ்ரீ சௌந்தரராஜ பாகவதர் அபங்கங்கள் பாடினார்.

அன்றிரவு, ஸ்ரீ சதுர்புஜ கோபாலன் பரமபதநாதனாக ஸேவை ஸாதித்து கருடவாஹனத்தில், திருவீதி புறப்பாட்டிற்காக எழுந்தருளினார்.

இவ்வாறு ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்ற மஹா ஸம்ப்ரோக்ஷனத்தில் கலந்து கொண்டவர்கள் மஹா பாக்யசாலிகள் என்று சொல்லவும் வேண்டுமோ!

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

*நமது மிஷன் சார்பில், ''சாந்தீபனி குருகுலம்'' என்ற டிரஸ்டின் கீழ் ஸாமவேத பாடசாலையும், ''யஜுர்வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.*

## வேணுகீதம் - தொடர்ச்சி

**காவஶ்ச க்ருஷ்ணமுக நிர்கத வேணுகீத-**
**பீயூஷ முத்தபித கர்ணபுடை: பிபந்த்ய: ।**
**ஶாவா: ஸ்நுதநஸ்தனபய: கபலா: ஸ்ம தஸ்து:**
**கோவிந்த மாத்மனி த்ருஶாஶ்ருகலா: ஸ்ப்ருஶந்த்ய: ॥ 7**

பசுக்கள், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருமுகத்திலிருந்து வெளிக் கிளம்பிய வேணுகானமாகிற அம்ருதத்தை, உயரத் தூக்கப்பட்ட காதுகளாகிற கிண்ணங்களால் குடிக்கின்றவைகளாய் கண்ணீரைப் பெருக்குகின்றவைகளாய் கண்வழியாக ஸ்ரீ க்ருஷ்ணனை மனதில் ஆலிங்கனம் செய்துகொண்டு நின்றன. பெருகிப்போன முலைப் பாலையும் இளம் புற்களையும் உடையவைகளாகி கன்றுகளும் ஆனந்தத்தை அடைந்து நின்றன.

**ப்ராயோ பதாம்ப விஹகா முனயோ வனே (அ)ஸ்மின்**
**க்ருஷ்ணேக்ஷிதம் ததுதிதம் கலவேணுகீதம் ।**
**ஆருஹ்ய யே த்ருமபுஜான் ருசிரப்ரவாலான்**
**ஶ்ருண்வந்த்ய மீலித த்ருஶோ விகதான்யவாச: ॥ 8**

அம்ம! இந்தக் காட்டில் பறவைகள் கூட ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்ப்பதற்கேற்றபடி அழகான துளிர்களையுடைய மரக்கிளைகளில் ஏறி கண்மூடாதவைகளாக வேறு ஸப்தங்களை கேட்காதவைகளாய் ஸ்ரீ க்ருஷ்ணனால் ஊதப்பட்ட மதுரமான வேணுகானத்தையே கேட்கின்றன. அனேகமாக, அவைகள் மஹரிஷிகளாக இருக்க வேண்டும். மஹரிஷிகள் வேதமாகிய மரத்தின் கிளையிலேறிப் பலன்களை விரும்பாமல் கர்மங்களைச் செய்து கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணனின் சரித்ரத்தைக் கேட்கிறார்கள்.

**நத்யஸ்ததா ததுபதார்ய முகுந்தகீத**
**மாவர்த லக்ஷித மனோபவ பக்ந வேகா: ।**
**ஆலிங்கன ஸ்தகித மூர்மிபுஜைர் முராரே:**
**க்ருண்ஹந்தி பாதயுகளம் கமலோபஹாரா: ॥ 9**

நதிகள், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய அந்த கானத்தை கேட்டு அப்பொழுது நீர்ச்சுழிகளால் அறியப்பட்ட மன்மததாபங்களால் வேகம் குறைந்தவைகளாய் தாமரைப் புஷ்பங்களை காணிக்கையாக உடையவைகளாய் ஆலிங்கனம் செய்வதால் மறைந்ததான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய இரு கால்களையும் அலைகளாகிற கைகளால் கட்டிக் கொள்கின்றன.

**த்ருஷ்ட்வா (ஆ)தபே வ்ரஜபஶூன் ஸஹ ராமகோபை:**
**ஸஞ்சாரயந்தமநு வேணு முதீரயந்தம்।**
**ப்ரேம ப்ரவ்ருத்த உதித: குஸுமாவலீபி:**
**ஸக்யுர் வ்யதாத் ஸ்வவபுஷாம்புத ஆதபத்ரம் ॥** 10

மேகமானது, வெய்யிலில் பலராமனுடனும் கோபர்களுடனும் கூட கோகுலத்திலிருக்கும் பசுக்களை கூடச்சென்று மேய்க்கிறவரும், வேணுகானம் செய்கின்றவருமான ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்த்து அன்பினால் உருவத்தை பெருக்கிக் கொண்டு மேலே கிளம்பியதாய் பூமாரிகளுடன் (உலகத்திற்கு நன்மை செய்வதில்) தனக்குத் தோழனான ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு தனதுடலால் குடை பிடித்தது.

**பூர்ணா: புளிந்த்ய உருகாய பதாப்ஜராக-**
**ஸ்ரீ குங்குமேன தயிதாஸ்தன மண்டிதேன ।**
**தத்தர்ஶன ஸ்மரருஜஸ் த்ருணரூஷிதேன**
**லிம்பந்த்ய ஆனனகுசேஷு ஜஹுஸ்ததாதிம் ॥** 11

அந்த ஸ்ரீ க்ருஷ்ணனுடைய தரிசனத்தால் உண்டான மோஹத்தையுடைய வேடஸ்த்ரீகள் ப்ரியநாயிகைகளுடைய ஹ்ருதயத்தில் அலங்கரிக்கப்பட்டதும் புற்களில் படிந்துள்ளதும் பற்பல கீர்த்தியுடைய ஸ்ரீ க்ருஷ்ணனுடைய தாமரைப் போன்ற பாதங்களுடைய சிவப்பு நிறத்தால் அதிகக் காந்தியுடையதுமான குங்குமத்தால் தங்கள் முகங்களிலும் ஸ்தனங்களிலும் பூசிக் கொண்டு க்ருதார்த்தர்களாக பாவித்து தங்கள் தாபத்தைப் போக்கிக் கொண்டார்கள்.

**ஹந்தாய மத்ரிரபலா ஹரிதாஸவர்யோ**
**யத்ராமக்ருஷ்ண சரணஸ்பர்ஶப்ரமோத: ।**
**மானம் தனோதி ஸஹகோகணயோஸ் தயோர் யத்**
**பாநீய ஸூயவஸ கந்தர கந்த மூலை: ॥** 12

ஹே ஸ்த்ரீகளே! பலராமனுடையவும் ஸ்ரீ க்ருஷ்ணனுடையவும் பாதஸ்பர்ஸம் பெற்று ஸந்தோஷம் அடைந்தது என்பதாலும் பசுக்களுடனும், தோழர்களுடனும் கூடின அவர்களுக்கு குடிக்கத் தண்ணீர், இளம்புல், குகைகள், கந்தமூலங்கள் இவைகளால் மரியாதை செய்வதாலும் இந்த கோவர்த்தனமலை விஷ்ணுபக்தர்களில் சிறந்ததன்றோ!

**கா கோபகைரநுவனம் நயதோருதார-**
**வேணுஸ்வநை: கலபதைஸ்தநுப்ருத்ஸு ஸக்ய: ।**
**அஸ்பந்தனம் கதிமதாம் புலகஸ்தரூணாம்**
**நிர்யோகபாஶ க்ருத லக்ஷணயோர் விசித்ரம் ॥** 13

ஹே தோழிகளே! கோபர்களுடன் ஒவ்வொரு காட்டிற்கும் பசுக்களை ஓட்டிச் செல்கிறவர்களும், கால் கட்டுகிற கயிறுகளை தலையில் சுற்றிக்கொள்வது, மாடு கட்டுகிற கயிறுகளை கழுத்தில் சுற்றிக் கொள்வது என்ற இடையர்களுடைய லக்ஷணமுடையவர்களுமான பலராம க்ருஷ்ணர்களுடைய அவ்யக்த மதுரமான பதங்களையுடைய, உத்தமமான வேணுகானங்களால் ஸரீரம் படைத்த ப்ராணிகளில் ஸஞ்சரிக்கின்றவைகளுக்கு, அசைவற்றிருக்குந் தன்மையாகிற ஸ்தாவர தர்மமும், மரங்களுக்கு ரோமாஞ்சம் உண்டாவதென்ற ஜங்கம தர்மமும், உண்டாயிற்றென்பது ஆஶ்சரியம்.

**ஏவம்வித்யா பகவதோ யா ப்ருந்தாவனசாரிண: ।**
**வர்ணயன்த்யோ மிதோ கோப்ய: க்ரீடாஸ்தன்மயதாம் யயு: ॥** 14

ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரிக்கின்ற ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடைய இவ்விதங்களான க்ரீடைகள் எவைகளுண்டோ, அவைகளை ஒன்றுக்கொன்று வர்ணித்துக் கொண்டு கோபிகைகள் தன்மயமாய் இருந்தார்கள். ■

---

காம க்ரோதங்களை தூண்டும் ஸம்பவங்கள் நிகழ்ந்தும் அவைகளினால் நாம் வெகுவாக பாதிக்கப்படாமல் இருந்தால் நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவதற்கான அடையாளம்.

**- ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள்**

# நக்ஷத்ராங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 14

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி

## விசாகம்

'குரு'வின் நக்ஷத்திரம் விசாகம். விசாகத்தில் பிறந்த ஸ்த்ரீ, குடும்பத்தில் கடைசி பையனை பர்த்தாவாக அடைகிறாள். விசாக நக்ஷத்ரம் ஏழு நக்ஷத்ரங்களால் சற்று சிதிலமடைந்த கிணறு போன்று அடையாளம் காட்டப்படுகிறது. ஆடி மாதம் 18-ந் தேதி முதல் 30-ந் தேதி முடிய நக்ஷத்ரோதய காலத்தில் ஆகாயத்தில் காணப்படுவதாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். இந்த நக்ஷத்ரத்திற்கு தேவதை இந்த்ராக்னீ.

இந்த்ராக்னீ என்ற தேவதைக்கு மிக அதிகமான சக்திகள் வேதத்தில் கூறப்பட்டுள்ளன. தேவதைகளுக்குள் இந்த தேவதை எப்பொழுதும் பலன் தருவதில் ஸித்தமாக உள்ளவர். மிகவும் பலம் மிக்கவர்களாக வர்ணிக்கப்பட்டுள்ளார். அத்துடன் துஷ்டமான வாயுக்கள், சத்ருக்களை விரட்டக்கூடிய சக்தி படைத்தவர்கள் இவர்கள்.

இந்த நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள், நல்ல உடற்கட்டு, பளபளத்த சரீரம் இவைகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள். நல்ல பேச்சாளர்களாக அமைவார்கள். சற்று பொறாமையும் இவர்களிடம் அமைய வாய்ப்புண்டு. பணத்தை செலவு செய்வதில் யோசிப்பார்கள். தன் அபிப்ராயத்திற்கு சற்று மாறுபாடாக மனதில் நினைத்து விட்டால் சண்டையிடத் தயங்க மாட்டார்கள்.

துலா ராசிக்காரராக இருந்தால் வ்யாபாரத்தில் ஸமர்த்தர்களாக இருப்பார்கள். உடம்பில் பலம் சற்று குறைவாக நினைப்பார்கள். வெளி தேசங்களில் ஸஞ்சரிப்பதில் அதிகம் ப்ரியம் கொண்டிருப்பர். எதிலும் சற்று யோசித்தே தீர்மானிப்பார்கள்.

வ்ருச்சிக ராசிக்காரரானால் பொன் நிறம் கொண்ட ஸரீரம் பெற்றவராகவும் பெரிய இடங்களில் புழக்கம் உடையவராகவும் இருப்பார்கள். பொதுவாக விசாக நக்ஷத்திரத்தில் ஜனித்தவர்களுக்கு விரோதிகள் மிகக் குறைவு. யாவரிடமும் அன்புடன் பழக முற்படுவர். ஸ்வதந்தரமாக செயல்படத் தயங்குவார்கள். விசாக நக்ஷத்ரக்காரர்களது

ஸ்நேஹத்தால் நாம் ஸத்ருக்களை ஸுலபமாக ஜயிக்கலாம். ஸுப்ரமண்யரை உபாஸிப்பதால் இவர்களுக்கு மிக நன்மைகள் ஏற்படும். விசாகத்தில் அக்ன்யாதானம் செய்து கொண்டால் உலகத்தில் ப்ரதிஷ்டையை அடைவான் என்று கூறப்பட்டுள்ளது.

அக்னிஹோத்ரிகள் வருஷருதுவில் ஆகட்டும், ஶரத்ருதுவில் ஆகட்டும், முக்யமாக இந்த்ராக்னீ தேவதை மூலமாகத்தான் ஹவிர்பாகங்களை அளித்து தேச ஸம்ருத்தியையும், விஷமற்ற தான்ய ஸம்ருத்தி, பசுக்களுடைய க்ஷேமம் இவைகளைப் ப்ரார்த்திக்கிறார்கள். ஒரு குலத்தில் மூன்று தலைமுறைகள் ஸோமயாகம் விடுபட்டிருந்தால் இந்த்ராக்னீ தேவதைக்கு ஹவிர்பாகம் அளித்தபின்தான் ஸோம யாகம் செய்ய அதிகாரம் கிடைக்கிறது. இவ்விதம், உயர்ந்த தேவதையை தன் ஸ்வாதீனமாக்கிக் கொண்டுள்ள விசாகம் நக்ஷத்ரம் மிக உயர்வானது. ■

## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி :

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**, சென்னை - 600 083

### மதுரமுரளி வருடசந்தா

''மதுரமுரளி'' க்கான வருடசந்தா ஜூன் '98 இதழுடன் முடிவடைந்துள்ளது.

அநேக சந்தாதாரர்கள் இன்னமும் தங்கள் சந்தாவை செலுத்த முன் வரவில்லை. அவர்களுக்கு இது விஷயமாக தனியாக தொடர்பு கொள்வது என்பது சிரமமான ஒன்றாகும். ஆகவே, சந்தா செலுத்த வேண்டியவர்கள் ***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDயாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

மதுரமுரளி,

திரு. V. சங்கரன்,

5 / 3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,

கே.கே. நகர், சென்னை - 600 078.

Phone No : 484 0527

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : நம்முடைய ஸம காலத்திலேயே பல மஹான்கள் வாழ்ந்து வருகையில் நம்முடைய குருவை நாம் எப்படி தெரிந்து கொள்வது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒவ்வொருவருக்கும் யார் குரு என்பதை தீர்மானிப்பது இறைவனே ஆகும். அந்தந்த குருவின் மூலமாகத்தான் அவரவர்களுக்கு அவர்கள் விரும்பும் பலன் ஏற்படும். நாம், நமக்கு என்று பகவான் ஸங்கல்பித்துள்ள குருநாதரை முதலில் பார்க்கையிலோ அல்லது அவரை பற்றி கேட்கையிலோ, நமக்குள்ளே ஒரு அகத்தூண்டுதல் ஏற்பட்டு அவரிடம் அழைத்துச் செல்லும். இது மிகவும் நுட்பமான விஷயம். அனுபவத்தினால் தான் இது புரியவரும்.

*கேள்வி : உத்தம குருவை சரணடைந்தும் சிலர் கஷ்டபடுகிறார்களே ஏன்?*

பதில் : உத்தமமான குரு உங்களுடைய சரணாகதியை ஏற்று கொண்டு விட்டால் உங்களுடைய வாழ்க்கையில் நன்மை மட்டுமே நடக்கமுடியும். உங்களின் பார்வைக்கும், லோகத்தின் பார்வைக்கும் அது கஷ்டம் என்றும் கெடுதல் என்றும் தோன்றினாலும். அது அவ்வாரல்ல. அவைகள் அனைத்தும் நன்மைகளே.

*கேள்வி : குருவை தியானிப்பது என்பது யாது?*

பதில் : குருவினுடைய தெய்வீக சக்தியை தியானித்தலே குருவை தியானிப்பது ஆகும். இத்தகைய பக்குவம் இல்லாதவர், குருவினுடைய ஸ்தூல ரூபத்தைத் தியானித்தாலே போதும்.

*கேள்வி : ஸத்ஸங்கத்திற்கு காம்யார்த்தமான நோக்கத்துடன் யாரும் வரக்கூடாதா?*

பதில் : உலகத்தில் நிஷ்காம்யமான பக்தியை மீரா, தியாகராஜர், ஏகநாதர் போன்ற மஹாத்மாக்களால்தான் பண்ணமுடியும். அடைய வேண்டிய லக்ஷியம் நிஷ்காம்யமான பக்தியாக இருப்பினும் இன்றைய ஸ்திதியில் நாம் அப்படி இல்லை. எல்லாம் கர்மாபடித்தான் நடக்கும், இது தலை எழுத்து, என்று பிறருக்கு உபதேசிக்கலாம். நமக்கென்று வரும்பொழுது ஆடிப் போய் விடுவோம். பேராசையாக இல்லாமல் வாழ்க்கையில் ஏற்படும் சிரமங்களுக்கு பகவானிடம்தான் ப்ரார்த்தனை செய்ய வேண்டும். நமக்கு பகவான்தான் கதி. போதேந்த்ராள், ஸ்ரீதர ஐயாவாள் போன்றவர்களே சில இடங்களில் சில அதிசயங்களை செய்து ஜனங்களுக்கு பகவந்நாமாவில் நம்பிக்கையை ஊட்டியுள்ளனர். ஆனால், அவர்களுக்கு அந்த அதிசயங்களை தான் செய்தோம் என்ற எண்ணம் இல்லை. ஸத்ஸங்கத்தில் காம்யார்த்தம் இருந்தால் தப்பு இல்லை. ஆனால் காமம் புகக்கூடாது.

# வேத கதைகள்-15

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்திரிகள்

## அறிவின் பெருமை

ஸ்வாயம்புவ, ஸ்வரோசிஷ, உத்தம, தாமஸ, ரைவத என்ற ஆறு மனுக்கள் இவ்வுலகை ஆண்டனர். தற்சமயம், வைவஸ்வத என்ற மனு உலகை ஆள்கிறார். ஒவ்வொருவருடைய ஆட்சி காலத்திற்கு மன்வந்தரம் என்று பெயர். எழுபத்தியொரு யுகம் ஒரு மன்வந்தரம் எனப்படும். இவர்களில், ஒரு மனுவானவர், தன் பிள்ளைகளுக்கு சொத்துக்களை பிரித்தளித்தார். அந்த ஸமயம், அவர் புதல்வர்களில், "நாபானேதிஷ்டன்" என்பவர், ப்ரும்மசரிய நியமத்துடன் குருகுலத்தில் வேதம் பயின்றார். அதனால் மனுவானவர் தன் பிள்ளைகளுக்கு சொத்தை பிரித்துக் கொடுக்கும்பொழுது அவன் ஞாபகம் அற்றவராக சொத்தில் அவனுக்கு பங்கு அளிக்கவில்லை.

வேதங்களை கற்று முடித்து நாபானேதிஷ்டன் தன் வீட்டிற்கு வந்தான். தனக்கு சொத்தில் பங்கு அளிக்கவில்லை என்று தெரிந்து கொண்டான். தனக்கு ஏன் பங்கு அளிக்கவில்லை என்று கேட்டான். அப்பொழுது அவன் தந்தை, இந்த சொத்தில் உனக்கு பங்கு கொடுக்காவிடினும், அதிகமான செல்வம் உனக்குக் கிடைக்கும்படி சில ரஹஸ்யமான விஷயங்களை உபதேசம் செய்கிறேன். அது உனக்கு பயன்படும் என்று கூறி, "இப்பொழுது அருகில் ஆங்கிரஸ் என்பவர்கள் ஒரு யாகம் செய்கிறார்கள். அவர்களுக்கு யாகத்தின் நடுவில் ஒரு சந்தேகம் ஏற்படப்போகிறது. அதை யாராலும் தீர்க்க முடியாது. இதனால் நான் உபதேசித்த ரஹஸ்யமான விஷயங்களை நீ அவர்களுக்கு விளக்கினால், அவர்கள் மகிழ்ந்து உனக்கு அதிகமாக செல்வம் அளிப்பார்கள். அதனால் உன் ஸகோதரர்களைக் காட்டிலும் அதிக பணக்காரனாக ஆகலாம்" என்று கூறி யாகத்திற்கு அனுப்பினார்.

நாபானேதிஷ்டனும் தந்தை சொற்படி யாகத்திற்குச் சென்றான். அவன் சென்ற ஸமயம், யாகத்தில் அந்த முனிவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு விவாதம் செய்து கொண்டிருந்தனர். நாபானேதிஷ்டனும் தந்தை உபதேசித்த ரஹஸ்யமான விஷயங்களை எடுத்துரைத்து அவர்கள் ஐயத்தை போக்கினான். அதனால் மகிழ்ந்த அவர்கள் மீதியுள்ள யாவற்றையும் நீ எடுத்துக்கொள்வாயாக என்று அவனுக்கு அளித்தனர். அவர்கள் யாகத்தை முடித்து சொர்க்கத்தை அடைந்தனர்.

முனிவர்கள் சொற்படி யாகத்தில் மீதியுள்ள எல்லாப் பொருள்களையும் அவன் எடுத்துக் கொண்டான். அதில் பசுக்கள் அதிகமாக இருந்தன. அவைகளையும் அவன் எடுத்துக் கொண்டான். அப்பொழுது சிவன் தோன்றி யாகத்தில் மீதியுள்ள பொருள்கள் எல்லாம் என்னைச் சார்ந்தது, அதை எடுக்க ஒருவருக்கும் அதிகாரம் கிடையாது என்று கூறினார். ''ஆங்கிரஸ்ஸுகள் எனக்கு அளித்துள்ளனர். அதனால் எனக்கும் இதை எடுக்க அதிகாரம் உள்ளது'' என்று நாபானேதிஷ்டன் வாதாடினான்.

பிறகு யாகத்தில் மீதியுள்ள பொருள்கள் யாவும் சிவனைச் சாரும். அதை எடுக்கவோ, கொடுக்கவோ யாருக்கும் உரிமை இல்லை என்று பெரியோர்கள் மூலம் நாபானேதிஷ்டன் அறிந்து யாவற்றையும் சிவனுக்கு அளித்து விட்டான். அதனால் சிவன் மகிழ்ந்து யாகத்திலிருந்து சில பொருள்களை மட்டும் பெற்றுக்கொண்டு பசுக்கள் அனைத்தையும் நாபானேதிஷ்டனுக்கே அளித்துவிட்டார். இதனால் அவன் பெரும் பணக்காரனாக ஆனான். தந்தை, தன் சொத்தில் பங்கு அளிக்காவிடினும் நல்ல அறிவு இருந்ததால் தந்தையின் உபதேசம் பெற்று நல்ல செல்வத்தை அடைந்தான். தந்தையின் சொத்தில் பங்கு பெற்றாலும், அவன் ப்ராதாக்கள் யாரும் இவனைப்போல் ஆக முடியவில்லை. இதனால், தந்தை சொத்து அளிக்காவிடினும் அறிவு இருந்தால் பெருமை அடையலாம் என்று விளங்குகிறது. இந்த கதை கிருஷ்ண யஜுர்வேதம் மூன்றாம் காண்டம் முதல் ப்ரச்னத்தில் இருக்கிறது.

இந்த கதை ஸ்ரீமத் பாகவத்திலும் உள்ளது. ■

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம்-5

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

ப்ரேமபக்தனின் நிலை விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றது. ***"உண்டியே உடையே உகந்தோடும் இம்மண்டலத்தொடும் கூடுவதில்லை"*** என்று உலகத்தாரோடு ஒட்டி வாழாது, பக்தனானவன் எம்பெருமானையே பரமாகக் கொண்டு இருக்கிறான். அவன் மனதில் எம்பெருமானைத் தவிர எந்த ஒரு எண்ணமும் எழும்புவதில்லை. உலகின் அனைத்து செல்வங்களையும் கொட்டிக்கொடுத்தாலும், விண்ணுலக செல்வங்களை அவன் காலடியில் கொண்டு கொட்டினாலும் எதையுமே திரும்பிப் பார்ப்பதில்லை. பகவானின் மதுர மதுரமான சிந்தனையின் க்ஷணநேர ஸுகத்தின் எதிரில் மூவுலக வைபவங்களும் துச்சமாக ஆகின்றன. ***"வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்"*** என அனைத்தையும் ஒதுக்கித் தள்ளுகிறான். முனிவர்களுக்கும், யோகிகளுக்கும் கிடைக்காத வைராக்யம் ஸ்ரீ க்ருஷ்ண சரணங்களை பற்றியிருக்கும் பக்தனுக்கு ஸுலபமாக லபித்துவிடுகிறது.

*"வைராக்ய ஸம்பதேஷாது யதீனாமபி துர்லபா ।*
*க்ருஷ்ணபக்திப்ரதானத்வாத் ராஜானமபிஸேவதே ॥*
*(ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ஹிதை)*

"ஸ்ரீ க்ருஷ்ணபக்தனாயிருப்பதால், துறவிகளுக்கும் துர்லபமான வைராக்யமாகிய செல்வம் இந்த வ்ரஜநிதி எனும் அரசனை வணங்கி நிற்கிறது" என்று எனது குருநாதர் ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் வ்ரஜநிதி எனும் பக்த சரித்ரத்தில் குறிப்பிடுகிறார்.

பேரரசர்களான அம்பரீஷன், ருக்மாங்கதன், குலசேகர் முதலியவர்கள் தன்னிடமிருந்த செல்வத்தில் நாட்டமின்றி இறைவனிடம் நாட்டம் கொண்டிருந்தனர். புரந்தரதாஸ், ரகுநாததாஸ், ரூபகோஸ்வாமிகள் போன்றவர்கள் நிறைந்திருந்த செல்வத்தை துறந்து ஸ்ரீ க்ருஷ்ணசரணங்களை செல்வமாய் பற்றினர். ஸ்ரீ த்யாகராஜர், வேதாந்ததேசிகர், ஸ்வாமி ஹரிதாஸ், துகாராம் போன்றவர்கள் தேடிவந்த பதவியையும் செல்வத்தையும் உபேக்ஷித்து பகவானையே கதியாக பற்றி இருந்தனர். எனவே, பகவத்ப்ரேமையில் திளைத்திருக்கும் பக்தன் மோக்ஷம் உட்பட எதையும் விரும்புவதில்லை.

மனிதனால் விரும்பப்படும் விஷயங்களை நான்கு பிரிவாய் பிரித்து அவற்றை புருஷார்த்தம் எனக் குறிப்பிட்டனர் பெரியோர். ஆனால், பகவத்பக்தியையே புருஷார்த்தமாய் கொண்டிருக்கும் பக்தன் அறம், பொருள், இன்பம், வீடு எனும் இந்த நான்கில் எதையுமே புருஷார்த்தமாய் நினைப்பதில்லை.

*"அனன்யபக்திர் கோவிந்தே புருஷார்த்தோத்தமோத்தமா ।*
*யாம் ப்ராப்ய பாவுகா பக்தா நஹி வாஞ்சந்தி கிஞ்சன ॥*
*(ஸ்ரீ க்ருஷ்ணபக்தி ரஸோதயம்)*

''கோவிந்தனிடமுள்ள அனன்ய பக்தியே புருஷார்த்தங்களுள் மிகவும் உயர்ந்தது. அதை அடைந்த பக்தன் வேறு எதையும் விரும்புவதில்லை.'' என்று ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸ்ரீ க்ருஷ்ணபக்தி ரஸோதயம் எனும் நூலில் குறிப்பிடுகிறார். எனவே, முக்ய புருஷார்த்தமான பக்தியை அடைந்தவன் எதையும் விரும்புவதில்லை என்கிறார் ஸூத்ரகாரர்.

'ந ஶோசதி' எதற்கும் வருந்துவதில்லை - வாழ்க்கையில் எல்லாவற்றையும் பகவானின் லீலைகளாக பார்ப்பவன் பக்தன். என்ன துன்பம் வந்தாலும், எத்தகைய நஷ்டம் வந்தாலும், வருந்துவதில்லை. அவமானப்படுத்தப்பட்டாலும் தாபம் கொள்வதில்லை. எதையும் பகவானுடைய லீலையாகவே நினைத்து சிரித்தபடி ஏற்றுக் கொள்கிறான். முனிகுமாரன் ஶ்ருங்கியின் ஶாபத்தை ஸந்தோஷமாய் வணங்கி ஏற்கிறான் பரீக்ஷித்து. பார்வதியின் ஸாபத்தை அஞ்ஜலி செய்து ஏற்கிறான் வ்ருத்ராஸுரன். ஒரே கதியான தாயாரும், பாம்பு தீண்டி இறந்துவிட, ஐந்து வயது குழந்தை அதையும் பகவானின் அனுக்ரஹமாய் எண்ணினான் என்று ஸ்ரீ நாரதரின் பூர்வஜன்ம சரித்ரத்தில் சொல்கிறார் ஸ்ரீ வ்யாஸர்.

*'பக்தானாம் ம் அபீப்ஸத: । அனுக்ரஹம் மன்யமான:'* 'தனது பக்தர்களுக்கு மங்களத்தையே செய்பவன் பகவான். எனவே அனைத்தும் அவனது அனுக்ரஹமே' என்கிறார். இங்கு தமது ஸுக, துக்கங்களை வைத்து, லாப நஷ்டங்களை வைத்து பகவானின் கருணையை தீர்மானிப்பது உலகத்தவர் இயல்பு. பக்தனோ, பகவானின் கருணையில் முழு நம்பிக்கைக் கொண்டு எது நேர்ந்தாலும் பகவானின் கருணையே என்றிருக்கிறான். எனவே அவன் எதற்கும் வருந்துவதில்லை.

'ந த்வேஷ்டி' எதையும் வெறுப்பதில்லை. விரும்பியது யாராலாவது தடைபடுமேயானால், விரும்பாதது எவராலாவது நிகழுமேயானால் அவர்களிடம் வெறுப்பு உண்டாகிறது.

ஆனால், பகவத்பக்தனுக்கோ பகவானைத் தவிர வேறு எதிலும் ஆசை இல்லாததால், அந்த பகவத்ப்ரேமைக்கு யாரும் தடை செய்ய முடியாது என்பதால் பிறரை வெறுப்பதற்கு இடமே இல்லை. மற்றவர்கள் அஹிதம் ஏதாவது செய்தாலும் அதை ஸந்தோஷமாகவே ஏற்றுக் கொள்கிறான். பாதரக்ஷைகளால் தோரணம் கட்டி தன்னை அவமதிக்க முற்பட்டபொழுதும். *''வயம் து ஹரிதாஸாணாம் பாதரக்ஷா வலம்பகா:''* என்று வணங்கினார் ஸ்ரீ வேதாந்த தேசிகர். அரங்கன் ஸன்னதியில் ஸ்ரீ பட்டரைப் பற்றி குறை பேசியவர்களின் வார்த்தைகளை யத்ருச்சையாக செவிமடுத்த ஸ்ரீ பராசரபட்டர் ''அரங்கனிடம் அடியேன் குறைகளை தெரிவிக்க அடியேனுக்கு மனம் வராது. அவர்கள் அடியேனது குறைகளை விக்ஞாபித்து உபகரிக்கின்றார்கள்'' என்றார். எல்லோரையும் பகவானின் ரூபமாகவும் எல்லாவற்றையும் பகவானின் லீலைகளாகவும் பார்க்கக்கூடிய பக்தன் எதையும் வெறுப்பதில்லை.

*''ந ரமதே''* ''எதோடும் ரமிப்பதில்லை'' *'நோத்ஸாஹீ பவதி'* - 'உலக விஷயங்களில் உத்ஸாஹம் காட்டுவது இல்லை. எல்லோராலும், எப்பொழுதும், ரமிக்கும்படியான வஸ்து பகவான் ஒருவனே. எல்லா அவயவங்களாலும் அவனிடம் ஈடுபடுவதாலேயே ஜன்மம் ஸபலமடைகிறது.

*ஜிஹ்வே கீர்தய கேஶவம் முராரிம் சேதோ பஜ ஸ்ரீதரம்*
*பாணித்வந்த்வ ஸமர்சயாச்யுதகதா: ஶ்ரோத்ரத்வய த்வம் ஶ்ருணு ।*
*க்ருஷ்ணம் லோகய லோசனத்வய ஹரேர்கச்சாங்க்ரியுக்மாலயம்*
*ஜிக்ரக்ராண முகுந்தபாததுளஸீம் மூர்தன்நமாதோக்ஷஜம் ॥*

*- குலசேகரர்*

''நாக்கே ! கேஶவனைப் பாடு. மனமே! முராரியை பஜிப்பாயாக. கைகளே! ஸ்ரீதரனை பூஜிப்பீர்களாக. காதுகளே! அச்யுதனுடைய கதையைக் கேளுங்கள். கண்களே! கண்ணனைப் பார்த்து மகிழுங்கள். கால்களே! ஹரியின் ஆலயத்திற்குச் செல்லுங்கள். மூக்கே! முகுந்தனின் பாதங்களில் அர்ப்பித்த துளஸியை நுகர்வாயாக. தலையே! அதோக்ஷஜனை வணங்கு'' என்று எல்லா அவயவங்களும் ஈடுபடவேண்டியது பகவான் ஒருவனிடமே என்பதை முகுந்தமாலா ஸ்தோத்ரத்தில் ஸ்ரீ குலசேகரர் உணர்த்துகிறார். இவ்வாறாகவே பக்தன் எல்லா அவயவங்களாலும் பகவானிடமே ரமிக்கிறான். எனவே அவனுக்கு வேறு விஷயங்களில் உத்ஸாஹம் இருப்பதில்லை.

வம்பு பேச்சுகளில் உத்ஸாஹம் காட்டி, அல்ப விஷயங்களில் ரமித்து, காமம், கோபம், பேராசை, அஹங்காரம் இவைகளுக்கு இருப்பிடமான ஜனங்கள் நடுவில் இருப்பது காட்டுத் தீயின் நடுவில் இருப்பது போல் பக்தனுக்கு இருக்கிறது.

*''மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்*
*வையந்தன்னொடும் கூடுவதில்லை யான்''*

என்று குலசேகரர் குறிப்பிட்டபடி இறைவனிடம் ஒன்றியிருக்கும் பக்தன் உலகுடன் ஒட்டாமல் ஒதுங்கியிருக்கிறான்.

*'மத்தோ பவதி'* 'உன்மத்தனாய் இருக்கிறான். உலக விஷயங்களில் அளவுக்கு மேல் ஈடுபாடு வைத்து அதனால் உன்மத்தர்களாய் அலையக்கூடியவர்களை உலகில் பார்க்கிறோம். பகவத்பக்தனோ பகவானின் ரூபமாதுர்யம், லீலாரஸம், கல்யாண குணங்களில் திளைத்து இருக்கையில் உன்மத்தனைப் போலவே இருக்கிறான்.

*ஹஸத்யதோ ரோதிதி ரௌதி காயதி*
*உன்மாதவன் ந்ருத்யதி லோகபாஹ்ய: ॥* - *ஸ்ரீமத் பாகவதம்*

''விசித்ரமான பகவானின் லீலையை எண்ணி சிரிக்கிறான். பகவானின் கருணையை நினைத்து நினைத்து அழுகிறான். இரவு பகலாய் பகவானின் நாம குணங்களை பாடிப்பாடி அரற்றுகிறான். ஸந்தோஷத்தில் பித்தனைப்போல் கூத்தாடுகிறான். உலகத்துடன் ஒட்டாத அவனை எப்படி உலகத்தவர்கள் புரிந்து கொள்ள முடியும்? உள்ளத்தில் கங்கா ப்ரவாஹமாய் பெருக்கெடுக்கும் பக்தி வெள்ளத்தில் மூழ்கி அப்படியே ஶாந்தமாய் நிற்கிறான்'' எனவே *'ஸ்தப்தோ பவதி'* என்கிறார். வேறு சிந்தனைகள் எல்லாம் நீங்கி பகவானிடம் தன்மயப்பட்டு மூர்ச்சை நிலையில் இருக்கிறான். ஆனந்தரூபியுடன் ஒன்றிய நிலையில் உள்ளும் புறமும் பெருக்கெடுத்து ஓடும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி ரமித்திருப்பதால் ஆத்மாராமனாய் இருக்கிறான் என்கிறார். இவ்வளவு நிலையையும் பாலகனான ப்ரஹ்லாத சரிதத்தில்

*க்வசித்ருததி வைகுண்ட சிந்தா ஶபல சேதன: ।*
*க்வத்ஹஸதி தச்சிந்தாஹ்லாத உத்காயதி க்வசித் ॥*
*நததி க்வசிதுத்கண்டோ விலஜ்ஜோ ந்ருத்யதிக்வசித் ।*
*க்வசித்தத்பாவானாயுக்தஸ் தன்மயோனு சகார ஹ ॥*
*க்வசிதுத்புலகஸ் தூஷ்ணீமாஸ்தே ஸம்ஸ்பர்ஶநிர்வ்ருத: ।*
*அஸ்பந்த ப்ரணயானந்த ஸலிலா மீலிதேக்ஷண: ॥*

என்று தெளிவாக ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

# எந்தரோ மஹானுபாவுலு - 3

ஒரு ஸமயம், திருவனந்தபுர யாத்திரையில், ஒரு மந்திரவாதி, ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளை மந்திரவித்தையில் போட்டி போட அழைத்தான். உடனே ஸ்வாமிகள், ஸாந்தமாக, நாளை வைத்துக் கொள்வோம் என அவனை அனுப்பினார். இதை அறிந்த அரசாங்க அதிகாரிகள் ஸ்வாமிகளின் உயிருக்கு ஆபத்து வரும் என பயந்து நடுங்கினர். ஸ்வாமிகள், ''பயப்பட வேண்டாம். நமக்கு ஒரு ஆபத்தும் வராது'' என்றார். திறந்த வெளியில் அரங்கு அமைத்து சுற்றி மக்கள் அமர்ந்து வேடிக்கை பார்க்க ஏற்பாடு செய்யுமாறு கூறினார். அதிகாரிகளும் அவ்வாறே செய்தனர்.

மறுநாள், அதிகாரிகளும் மக்களும், பயத்துடனும் ஆவலுடனும் குழுமி இருந்தனர். பெரிய சந்தனப் பொட்டு, அதன் நடுவில் குங்குமப் பொட்டு, கழுத்தில் சிவப்பு பூ மாலை, சிவப்பு வஸ்திரம், சிவந்த பெரிய கண்கள், இப்படி பயங்கரமான ஸ்வரூபத்துடன் வந்த மந்திரவாதியைப் பார்த்து மக்கள் நடுங்கினர். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளும் குறித்த நேரத்தில் கம்பீரமாக ஸாந்தமான தோற்றத்துடன் காவி உடை, தண்ட கமண்டலம், கோபீ சந்தன நாமத்தில் அலங்கரித்த நெற்றி, கழுத்தில் துளஸீ மாலை, இவற்றுடன் அழகிய புன்முறுவலுடன் அனைவரையும் ஆசீர்வதித்தபடி வந்து சேர்ந்தார்.

மந்திரவாதி ஆரவாரத்துடன் ''ஸ்வாமிகளே, வேதாந்த பாடம் மட்டும் அறிந்த தாங்கள் வீணாக அடம் பிடித்து என்னுடன் போட்டியிட வேண்டாம். இதுவரை, யாரும் என்னிடமிருந்து உயிருடன் திரும்பியதில்லை. இப்பவும் காலம் மிஞ்சவில்லை. நான் ஜயித்ததாக பத்திரிகை எழுதிக் கொடுத்து விட்டு உயிர் பிழைத்து போங்கள்'' என்று சவால் விட்டான். ஸ்வாமிகள் அதற்கு, ''நான் இவனைக் கண்டு பயப்படவில்லை. என் ஸ்வாமி ஸ்ரீ மூலராமன் என்னைக் காப்பாற்றுவதை எல்லோரும் கண்கூடாகப் பார்க்கப் போகிறீர்கள்'' என்று சொல்லி மந்திரவாதியிடம் ''உன் கை வரிசையைக் காட்டு'' என்றார்.

மந்திரவாதி அங்கும் இங்கும் ஆர்ப்பாட்டமாக நடை போட்டு, தரையில் ஒன்றுக்குள் ஒன்றாக ஏழு வளையங்கள் போட்டு, நடுவில் ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்து, அதன் மேலும் கீழும் நிறைய குங்குமத்தை தடவி வைத்தான். ''இந்த வட்டங்களுக்குள் புகுந்து இந்த பழத்தை'' எடுங்கள் பார்க்கலாம் என்றான்.



''முதல் வளையத்தில் நெருப்பு மழை கொட்டும், அதில் பிழைத்தால், அடுத்த வளையத்தில் கருநாகங்கள் படைபடையாக வந்து தீண்டும், அதிலும் தப்பினால், அடுத்த வளையத்தில் சூலங்கள் பாய்ந்து வரும். அதையும் தாண்டி பழத்தை எடுத்தால், உடனே பிணமாவது நிச்சயம்'' என்று மேலும் கூறினான். சபையோர்கள் நடு நடுங்கினர்.

ஸ்ரீ விஜயீந்தீர ஸ்வாமிகளோ ஶாந்தமாக, தன் சிஷ்யன் பீமசேனனை அழைத்து, அவன் மேல் தீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்து ''பயப்படாதே! நான் இருக்கிறேன். நம் ஸ்வாமி இருக்கிறார். நீ சென்று பழத்தை எடு'' என்று சொன்னார். இந்த வித்தைக்கு ''மோடி எடுப்பது'' என்று பெயர்.

பாலகன் பீமசேனன், ஸ்வாமிகளை வணங்கி நிர்பயமாக முதல் வளையத்தில் நுழைய, நெருப்பு மழை கொட்டியது. உடனே ஸ்வாமிகள் அதைப் பார்க்க, அது சந்தன மழையாக மாறியது. அடுத்த வளையத்தில் பீமசேனன் நுழைய, கருநாகங்கள் படமெடுத்து சீற, ஸ்வாமிகள் அவைகளை நோக்கிய உடனே எங்கிருந்தோ கருடன் கூட்டம் கூட்டமாய் வந்து அவைகளைக் கொத்திக் கொண்டு சென்றன. மந்திரவாதி முகம் இருள ஆரம்பித்தது. ஸ்வாமிகள் தேஜோமயமாக அமர்ந்திருந்தார்.

அடுத்த வளையத்தில் சிஷ்யன் நுழைய, சூலங்கள் பாய்ந்து வர ஸ்வாமிகளின் கடாக்ஷம் பட்ட உடனேயே அவை புஷ்ப மாலைகளாக மாறி சிஷ்யன் கழுத்தில் விழுந்தன. உடனே மற்ற வளையங்களைக் கடந்து சிஷ்யன் நடுவிலிருக்கும் எலுமிச்சம் பழத்தை எடுத்து ஓடி வந்து ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளின் சரணங்களில் வைத்து நமஸ்காரம் செய்தான். ஸபையோர் ஆரவாரித்தனர். ஸ்வாமிகள் பழத்தை இடது காலால் கெந்தி, மந்திரவாதி முன் எறிந்தார். அவன் ஓடி வந்து ஸ்வாமிகளின் பாதங்களில் பணிந்து மன்னிப்பு கேட்டான். ஸ்வாமிகளும் அவனை நல்ல வழியில் கடவுளை வழிபடுமாறு உபதேசித்து, புத்திமதி கூறி ஸன்மானங்கள் அளித்து அனுப்பி வைத்தார்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# நமது சிந்தனைக்கு - சென்ற இதழ் தொடர்ச்சி

- ஸ்ரீ ஸ்வாமிகள்

பகவானுடைய மாயை (ப்ரக்ருதி) மிகவும் பொல்லாதது. பகவானுடைய மாயையை பகவானுடைய துணை கொண்டுதான் ஜெயிக்க வேண்டும். ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கதை சொல்வார். ஒரு விதவை பெண்ணிற்கு உலகத்தில் எந்த விதமான சொந்தபந்தம், காரியமும் இல்லை. அவளுடைய ஜீவனத்திற்கு வேண்டியஅளவு சொத்தும் இருந்தது. அவள் தன்னை ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்ளலாமல்லவா! அதுதான் மாட்டாள். ஒரு பூனைக்குட்டியை வளர்த்துக் கொண்டு, அது நேரத்திற்கு சாப்பிட்டதா, தூங்கியதா என்று அதை பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள்.

பகவானுடைய மாயை அத்தகையது. பகவனுடைய மாயையும் பகவானிடமேதான் உள்ளது. ஆனால், அதனால் அவனுக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை. பாம்பிடம் இருக்கும் விஷம் பாம்பை ஒன்றும் செய்வதில்லை இல்லையா? அதுபோல், ஒரு மாயாஜால வித்தை செய்பவன், மந்திரத்தில் மாங்காய் வர வைப்பதாக வித்தை காண்பிக்கின்றான். நமக்குதான் ப்ரமிப்பு. அவனும் நம் கூடவே ப்ரமித்தாற்போல் நடித்தாலும் மாங்காய் எங்கிருந்து வந்தது என்று அவனுக்கு நன்றாகத் தெரியும் இல்லையா? அதுபோல் பகவான் ஒரு மாயாவி. ஆனால், அவனுடைய மாயையை வெல்வதற்கு அவனே உபாயமும் கூறியுள்ளான்.

நான் உன்னை ஆன்மீக பாதைக்கு வரும்படி நிர்பந்திக்கவில்லை. இந்த உலகம் நீ விளையாடும் களமே. இந்த உலகில் இறங்கு; தாராளமாக விளையாடு; ஆனால், அதற்கு முன்பு இந்த விளையாட்டில் சுகம், துக்கம், கோபம், போட்டி, பொறாமை, சண்டை, வ்யாதி, மூப்பு, மரணம், ஏமாற்றம் எல்லாம் உண்டு என்று தெரிந்து கொள். எப்படி தெரிந்து கொள்வது என்கின்றாயா? உனக்கு முன்னே இந்த களத்தில் விளையாடிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து தெரிந்து கொள். இதுவரையில் உன் வாழ்க்கையில் நடந்ததைக் கொண்டு உணர்ந்து கொள்.

கார் ரேஸ் போன்ற பந்தயத்தில் இறங்குபவனுக்கு மரணமும் நேரலாம். வெற்றியும் கிடைக்கலாம். தோல்வியும் கிடைக்கலாம். விபத்துகளும்•ஏற்படலாம். இதற்கெல்லாம் துணிந்தால்தான் இந்த ரேஸில் நீ இறங்கலாம். அதுபோல், இந்த உலகத்தில் சுகம், துக்கம் இண்டும் மாறி மாறித்தான் வரும். உலகத்தில் சுகம் மட்டுமோ, துக்கம் மட்டுமோ அடைந்தவரில்லை. வாழ்க்கையில் சுகமும் இளமையும் இருக்கும்பொழுது கொட்டம் அடித்து விட்டு, துக்கம் வரும்பொழுது இறைவனைக் குறை கூறுவது சரியல்ல!

எவ்வளவுதான் பேசு, எவ்வளவுதான் படி, எவ்வளவுதான் கேள். அனுபவத்திற்கு வராதவரைக்கும் இவைகள் அனைத்தும் வீணே. எனக்கு இந்த உலக வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால் இதிலிருந்து மீள்வதற்கும் ஒரு வழி உண்டு. மீள்வது மட்டும் அல்ல; பேரானந்தத்தை அனுபவிக்கலாம். இந்த ஜன்மா மட்டும் அல்ல. இனி உனக்குப் பிறவியே வரப்போவதில்லை. அது மட்டும் இல்லை, சுகத்திற்கு துக்கம் எதிர்பதம். இந்திரியங்களால் அறியப்படுவதே சுகம். ஆகவே, அதற்கு எதிர்பதம் உண்டு. ஆத்மா தன்னைத்தான் அறிவதுதான் ஆனந்தம். அதற்கு எதிர்பதமே கிடையாது. அது இருமை இல்லாதது, எதையும் சாராதது. ஆகவே அதற்கு அலுப்போ, நேரமோ, காலமோ, தேசமோ ஒன்றும் கிடையாது.

அப்படி அடைந்தவர்கள் இறைவனுடைய மாயையில் மாட்டிக்கொள்ளாதவர்கள். ''ப்ரக்ருதியை தன்வசமாக்கிக் கொண்டவர்கள். ''ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்கள் தனக்கோ, பிறருக்கோ, இகத்திற்கோ, பரத்திற்கோ, உபயோகமில்லாத கார்யத்தை செய்வார்கள்'' என்று கூறிய பகவான், ''என்னுடைய ப்ரக்ருதியை வசப்படுத்திக் கொண்டவர்கள் எப்பொழுதும் என்னைப் பற்றியே தியானிப்பார்கள். தியானிப்பவர்கள், எழுதிய சித்திரம் போல் தியானிக்காமல் என் ரூப லாவண்யத்தை நினைத்து நினைத்து மக்னமாவார்கள்'' என்கிறான்.

பகவானுடைய கருணையை நினைத்து நினைத்து உருகுவார்கள் பக்தர்கள். பாவம் தான் பக்தி. இறைவனுடைய கருணையையோ குருவினுடைய கருணையோ நமக்கு ஸ்மரிக்கத் தெரியவில்லை என்றால் நாம் ஜடமே. இறைவனுடைய கருணையை நினைத்து நினைத்து உருகியதால் அவர்களுடைய கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் ஏற்படும்; மேனி சிலிர்க்கும்; குரல் தழுதழுக்கும். தனிமையில் உட்கார்ந்து கொண்டு பகவானை நினைத்து புலம்பி அழுவார்கள்.

இதையே தான் பகவான் பகவத்கீதையில்

*ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஸ்ச த்ருடவ்ரதா: ।*
*நமஸ்யந்தஸ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥* என்கிறார்.

எப்பொழுதும் பகவானையே கீர்த்தனம் செய்து கொண்டிருப்பார்கள். அவனுடைய அடியவர்கள் ஸங்கத்தையே விரும்புவார்கள். அவர்களுக்கும் கைங்கர்யம் செய்வார்கள். எப்பொழுதும் பகவானுடைய நாமங்களையே சொல்லி கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

இத்தனை க்ருபை செய்த பகவானுக்கு என்ன ப்ரதி செய்வது, ஒன்றும் ப்ரதி செய்ய முடியவில்லையே? அவனுடைய க்ருபைக்கு எது செய்தால் தான் ப்ரதியாகும் என்று கதறி அழுது எங்கும் இருக்கும் அவனைக் கண்டு எப்பொழுதும் சிரசு தரையில் படும்படியாக நமஸ்கரித்துக் கொண்டே இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ப்ரகிருதியை வசப்படுத்திக் கொண்டவர்கள். பகவானுடைய மாயை இவர்களிடம் செல்லாது. இப்பேர்ப்பட்டவர்களை உண்மையாக அண்டியவர்களிடமும் செல்லாது.

பகவானுடைய மாயை விடுபட்டவர்கள் எப்பொழுதும் கீர்த்தனமும் வந்தனமும், செய்து கொண்டிருப்பவர்கள் மட்டும் அல்லர்.

இதையும் பகவத்கீதையில் பகவான்,

*ஞான யக்ஞேன சாப்யன்யே யஜந்தோ மாமுபாஸதே ।*
*ஏகத்வேன ப்ருதக்த்வேன பஹுதா விஸ்வதோமுகம் ॥* என்கிறார்

சிலர் ஞான யோகத்தால் பகவானை அடைந்து ஆத்மாராமர்களாக எப்பொழுதும் மோனத்தவம் கொண்டு ஏகாந்தத்திலும் இருந்து விடுவார்கள். இவர்களும் ப்ரகிருதிக்கு வசப்படாதவர்களே.

---

*உலகில் பலரை தனக்காக வாழவும் சிலரை பிறருக்காக வாழவும் பகவான் படைத்துள்ளான் என்பதை தான் உலக வாழ்க்கையில் நான் தெரிந்து கொண்டது.*

**- ஸ்ரீ மஹா பெரியவாள்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 10

சீக்கியர்கள் மிகவும் குரு பக்தி உள்ளவர்கள். இந்துக்களுடைய வழிபாட்டு ஸ்தலங்களை கோவில் என்றும், கிறிஸ்துவர்களுடைய வழிபாட்டு ஸ்தலங்களை சர்ச் என்றும், முகமதியர்களுடைய வழிபாட்டு ஸ்தலங்களை மசூதி என்றும் கூறுகின்றோம். அதுபோலவே சீக்கியர்களுடைய வழிபாட்டு ஸ்தலங்களுக்கு *'குருத்வார்'* என்று பெயர்.

குருவின் வழியாகத்தான் இறைவனை அடைய முடியும் என்று பொருள்படும்படியாகவே அவர்களின் கோவில்களுக்கு 'குருத்வார்' (குரு + த்வாரம்) என்று பெயர் வைத்துள்ளார்கள். நமக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுத்து, நம்மை சிறந்த கல்விமானாக திகழ செய்பவர் வித்யாகுரு. நம்முடைய அக்ஞானத்தைப் போக்கி ஞானத்தை அளித்து இறைவனிடம் அழைத்து செல்பவர் ஞானகுரு.

நாம், அத்தகைய பெரியவர்களை அண்டி அவர்களுக்கு வினயத்துடன் ஸேவை செய்தால்தான் ஞானத்தை அடையமுடியும். நமக்கு அவர்களிடம் மரியாதையும், அன்பும், பயமும் இருக்க வேண்டும். உலகத்தில் ஸாமான்யமாக, நாம் நம்முடைய ஸ்நேகிதர்களுடனோ உறவினர்களிடமோ நடந்து கொள்வது போல் அவர்களிடம் நடந்து கொள்ளல் ஆகாது. அவர்கள் கருணையினால் நம்முடன் குழந்தைகள் போல பழகுவார்கள். இருந்தபோதும், நாம் அவர்களிடம் மரியாதையுடனும் வினயத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

நாம், நம்முடைய பெரியவர்கள் சொல்வதை அலட்சியப்படுத்தலாகாது. அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் அனுபவபூர்வமாகவே உணர்ந்து கூறியுள்ளார்கள். இன்று அவர்கள் சொல்லும் சில விஷயங்கள் நமக்கு கசப்பாக இருந்தாலும் நாளடைவில் அவைகளினால் பெரிய நன்மைகள் விளையும். பெரியவர்களை ஒருகாலும் அலட்சியப்படுத்தக்கூடாது.

ஒரு ஸமயம், சீக்கியமத குரு சிந்துநதி தீரத்தில் அமர்ந்து அவருடைய மதநூலை பாராயணம் செய்து கொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் அவருடைய ஒரு சீடன் தன்னுடைய குருவிற்கு காணிக்கை செலுத்த விரும்பினான். அவன் பெரிய தனிகன். ஆகையால் இரண்டு



பெரிய தங்க வளையல்கள் செய்து அவைகளில் பல உயர்ந்த நவரத்தினங்களை இழைத்து, அதை ஒரு பெரிய தங்கத் தாம்பாளத்தில் வைத்து எல்லோரும் பார்க்கும்படி பெருமிதமாக எடுத்து வந்தான். அதை குருவின் பக்கத்தில் வைத்துவிட்டு கர்வமாக நின்றான்.

குருவோ, பாராயணம் செய்து கொண்டிருந்தபடியே ஒரு வளையலை எடுத்து தன் கை விரல்களில் சுற்றினார். அது தவறி பக்கத்தில் உள்ள சிந்து நதியில் போய் விழுந்து விட்டது. அந்த தனிகனான சீடன் உடனே அதனுடன் தானும் நதியில் குதித்து வளையலை தேடித் தேடி பார்த்தான். அது கிடைக்கவில்லை. அந்தி நேரம் நெருங்க நெருங்க எங்கும் இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. வேகமாக கரையேறியவன், ''குருவே, 'பொழுது சாய்ந்துவிட்டது. இன்னும் வளையல் கிடைக்கவில்லை. தாங்கள் எங்கே அது உள்ளது என்று தயவு செய்து கூறுவீர்களானால் உடனே மூழ்கி எடுத்து விடுகின்றேன்'' என்று கெஞ்சி கேட்டான்.

குருவும் தட்டில் இருந்த மற்றொரு வளையலையும் எடுத்து நதியில் தூக்கி எறிந்து, ''அது அங்குதான் விழுந்தது'' என்றார். அவன் அப்படியே ப்ரமித்து நின்றான். சிறிது சிறிதாக யோசிக்கத் தொடங்கினான். மகான்களுக்கு பொன்னும் வைரங்களும் ஒரு பொருட்டல்ல. அதையும் நாம் இப்படி பல பேர் மெச்சுவதற்காக ஊரறிய பகட்டுடன் கொண்டு வந்து கொடுத்தது தவறு. மகான்களுக்கு நாம் எந்த ஒரு கைங்கர்யத்தை செய்ய நினைத்தாலும் வினயத்துடனும், அன்புடனும், அகங்காரமில்லாமலும் செய்ய வேண்டும் என்று உணர்ந்தான். ■

---

*அணு ஆயுதங்களையும் ஏனைய போர்க் கருவிகளையும் அழித்து விடுவதால் மட்டும் உலகத்தில் சமாதானத்தை கொண்டுவர முடியாது. அப்பொழுதும் மக்கள் தங்கள் கைகளில் கிடைத்த சிறு கம்புகளைக் கொண்டும் சண்டையிடலாம்.*

*தெய்வீகத்தினால் மட்டுமே உலகில் பூரண அமைதி நிலவ செய்யமுடியும்.*

**- ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள்**

# ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து-36

*கேளாதளிக்கும் உன் கேழல் புகழைக்*
*கேடு செய்யாது அருள் அருணாசலா* - தொடர்ச்சி

ஸர்வ சக்தி வாய்ந்த இறைவன், நாம் கேட்காமலேயே தன்னுடைய தரிசனத்தை கொடுக்கும் ஸ்வபாவம் உள்ளவன். பகவானுக்கு ஒரு காலத்திலும் கேடு என்பது கிடையாது. ஆதலால், பகவானுடைய புகழுக்கும் ஒருக்காலத்திலும் கேடு கிடையாது. இவ்வாறு 'கேளாதளிக்கும்' குணத்தினால் கேடு இல்லாத புகழை உடைய பகவானிடம் நாயகியானவள் அந்த புகழுக்கு ஒரு ஹானி வந்து விடப் போகிறது, தான் ப்ரார்த்தித்தும் தனக்கு கிருபை செய்யவில்லை என்று ஊரார் சொல்லி விடும் முன், தனக்கு அருள வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறாள். இங்கு நாயகி ப்ரார்த்திப்பது, ''நாயகனான பகவானையே தனக்கு வேண்டும்'' என்று.

*கையினிற் கனியுன் மெய்ரசங்கொண்டு*
*உவகை வெறி கொளவருள் அருணாசலா - 23*

ஆத்ம சொரூபம் என்பது நம்மிடமே உள்ளது. அதை அடைவதற்கு நாம் எங்கும் போகவேண்டிய அவசியம் இல்லை. யோகம் பழக வேண்டுமானால், ஏகாந்த இடம், மலைப் ப்ரதேசம் போன்றவைகள் தேவை. அவ்விடங்களில் சென்றாலும் ப்ராணனை அடக்கி, ஶ்ரமப்பட்டு ஸாதனை செய்ய வேண்டும். பக்தி பண்ண வேண்டுமானால் ஒரு ஸ்வாமி தேவை. அந்த ஸ்வாமிக்கு புஷ்பம், ஆரத்தி, நைவேத்யம் முதலிய உபசாரங்கள் தேவை. அது போல், கர்மானுஷ்டானங்களும் மிகச் சிரமமாகவே உள்ளன. கர்மானுஷ்டானத்திற்கு நிறைய சாமான்கள் தேவை. ஆசாரமும் அதிகமாயிருக்க வேண்டும்.

ஆனால், ஆத்ம ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதற்கோ, எதுவுமே தேவையில்லை. பேசாமலிருப்பதே போதும். இவ்வாறாக 'கையினிற் கனியுன்' ஒருவன் உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனி போல இந்த ஆத்ம ஸ்வரூபம் சுலபமாக உள்ளது. 'மெய்ரசங்கண்டு' - உனது உண்மையான ஸ்வரூபத்தைக் கண்டு அந்த ஆனந்தத்தில் திளைப்பதற்கு எனக்கு ஒரு அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

இதையே சங்கர பகவத் பாதாளும் தன்னுடைய ஸ்தோத்திரத்தில் *'மஹ்யம் தேஹிச மே பகவன் மதியம் ஏவஸ் ச சொரூபம் ஆனந்தம்'* என்று ப்ரார்த்திக்கிறார். இறைவா! என்னையே எனக்குக் கொடு என்று இதற்கு அர்த்தம். நாம் ப்ரஹ்மானந்தமயமான வஸ்து என்று தெரிந்து விட்டால் ஒரு கவலையும் இல்லை.

ஆனால், இதை புத்தி பூர்வமாய் தெரிந்து கொள்ள முடியாது. தெரிந்து கொள்ள முயல்வதும் வீணே. ஏனென்றால் நமக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்று பாரபக்ஷம் இருக்கும்பொழுது, உப்பு, புளி, காரம் முதலிய ருசிகள் தெரியும்பொழுது வேதாந்தம் என்பது ஒரு பொழுதுபோக்காகவே போய்விடும். நாம் ப்ரஹ்மானந்த வஸ்து என்பது அனுபவத்தில் வந்தால்ஒழிய ப்ரயோஜனம் இல்லை. இந்த அழிவில்லாத ப்ரஹ்மானந்தவஸ்துவை குரு ஒருவரால் மட்டுமே கொடுக்க முடியும்.

நாம் இரவில் ஸ்வப்னத்தில் கண்டது பகலில் தெரிவதில்லை. ஸ்வப்னத்தில் கண்டதைப் பற்றி கவலையும் இல்லை. ஏனென்றால் ஸ்வப்னம் என்பது மித்யை ஆகும். எங்ஙனம் ஸ்வப்னம் என்பது மித்யையோ, அங்ஙனமே இந்த உலகமும் ஒரு மித்யை ஆகும். இவ்வுலக வாழ்க்கை என்பது ஒரு தூக்கமாகும். இதற்கு அஜ்ஞான தூக்கம் என்று பெயர். குரு ஒருவரே இந்த அஜ்ஞான தூக்கத்தைப் போக்குகிறார்.

நாம் தூங்கும் தூக்கத்திற்கும், ஞானிகள் தூங்கும் தூக்கத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஞானிகள் தூங்கும்பொழுது தங்கள் ஸரீரம் ஓய்வெடுத்துக் கொள்வதை ஸாக்ஷி மாத்திரமாகவே பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஸரீரத்திற்கு ஓய்வு என்பதைத் தவிர தூக்கமே இல்லை. ஏனெனில், அவர்கள் அஜ்ஞானத்தை கடந்தவர்கள்.

உலகம் மித்யை என்று தெரிந்தும், குரு ஒருவரால் மட்டுமே இந்த மாயையிலிருந்து நம்மை விடுவிக்க முடியுமென்று தெரிந்தும் அதற்காக ப்ரயத்தனம் செய்யாதவன் 'ஆத்மஹத்தி' செய்து கொண்டவனாவான். 'ஆத்மஹத்தி' என்றால் என்ன, தற்கொலை செய்து கொள்பவன் ஸரீரத்தைத்தான் அழித்து கொள்கிறான். ஆனால், 'ஆத்மஹத்தி' செய்து கொள்பவனோ தன்னுடைய ஆத்மாவிற்கே துரோகம் செய்கின்றான்.

ஆனால், ஆத்ம ஸாஷாத்காரம் மிகவும் சுலபமாகவே இருக்கிறது. நமக்கு இருக்கும் அவநம்பிக்கையே இதற்கு பெரும் தடையாகவே இருக்கிறது. உலக விஷயங்களில் செல்லும் நம் மனதை தடுத்து

ஆத்மாவில் செலுத்தும் ஒரு குரு கிடைத்து விட்டால் இந்த ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்று மிகவும் சுலபமே. பகவான் நம்மை படைத்ததும் இதற்குத்தான். ஆகவே, ஆத்மாவை அடைவதற்காக ஸாதனை புரியும் ஸாதகனுக்கு பகவான் உறுதுணையாக இருப்பானே ஒழிய ப்ரதிகூலமாக இரான். பகவானை அடைய முயற்சித்து மோசமானவர்கள் என்று இதுவரை எவரும் இல்லை.

குருவின் முன்புதான் நம் மனது பெட்டிப்பாம்பாய் அடங்குகிறது. பகவான் சொன்ன ஒரு சம்பவம். சொரூபானந்தர் என்னும் மஹாத்மா இருந்தார். அவருடைய சிஷ்யர் அவர் மேல் 'பரணி' பாடினார். பரணி என்பது ராஜாக்கள் போரில் வென்று வந்தால் அவர்கள் மீது பாடுவது என்பதாகும். இதைக் கேட்ட அங்கிருந்த வித்வான்கள், ''ராஜாக்கள் மேல்தான் 'பரணி' பாடலாம். உன் குரு மீது பாடலாகாது'' என்று ஆக்ஷேபித்தார்கள். அவர்களை அந்த சிஷ்யன் தன் குரு முன் அழைத்து சென்று உட்கார வைத்தான். உட்கார்ந்தவுடன், அவர்களின் மனமானது தானாக அடங்கி த்யானத்தில் போய்விட்டது. அவர்களுக்கு அங்கிருந்து திரும்பிப் போக வேண்டும் என்ற எண்ணம் கூட தோன்றவில்லை. அவர்கள் தங்களை அழைத்து வந்த சிஷ்யனைப் பார்த்து ''யாராலும் வெல்ல முடியாத மனதை உனது குருவானவர் வென்றிருப்பதால், பரணி மட்டுமில்லை, எது வேண்டுமானாலும் அவர் மேல் பாடலாம்'' என்று கூறி சென்றனர்.

இதிலிருந்து மனமே பெரிய சத்ரு என்றும் அதை வென்றவனே தீரன் என்றும், குரு சொல்லும் வழியில் சென்றால் மனதை வென்று ஜீவன் முக்தி வரை செல்லலாம் என்றும் தெரிகிறது.

(தொடரும்)

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**ஆகஸ்ட் 1-ந் தேதி முதல் 6-ந் தேதி வரை**

The Gopalapuram Hindu Religious Society (Regd.) சார்பில் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோவிலில் நடைபெறும் ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் தினமும் இரவு 7 மணியளவில் பக்தவிஜயம் பற்றி உபன்யாஸம் செய்கின்றார்கள்.

ஸ்ரீ ஹரி:

*ஓம் நமோ பகவதே வாஸுதேவாய*
*ஸ்ரீ ராதாக்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:*

முரளீமண்டித கரகமலம் முனிஜன மோஹிதம்
வ்யத்யஸ்தபாதம் வனமாலாதாரிணம்
ப்ரேமபக்தமண்டல நித்யகீர்த்திதம்
ஸ்ரீப்ரேமிகவரதம் ஆஸ்ரயேऽஹம்

## குருஜீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்
## சென்னை - 600 083

## மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஐந்தாம் வருட ப்ரஹ்மோத்ஸவம்

நடக்கும் இடம் : **மதுரபுரி**
தேதி : *14-8-98 முதல் 24-8-98 வரை*

நிகழும் பஹுதான்ய வர்ஷம் ஆடி மாதம் 29-ம் தேதி (14-8-98) வெள்ளிக்கிழமை கோகுலாஷ்டமி ஶுப தினத்தில் ஆரம்பித்து, மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் ஜனனோத்ஸவம் 'மதுரபுரியில்' நடக்க இருக்கின்றபடியால் பாகவதோத்தமர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

- TRUSTEES

'மதுரபுரி' என்பது ஆஸ்ரமத்தின் பெயர்

தாம்பரம் To ஸ்ரீபெரும்புதூர் மார்க்கத்தில் "மலைப்பட்டு" என்ற இடத்தில் இறங்கி வரவேண்டும்.

பஸ் நம்பர் : (தாம்பரம்-ஸ்ரீபெரும்புதூர்) 55S, 55N மற்றும் பாரதி ட்ரான்ஸ்போர்ட், வேல்முருகன் ட்ரான்ஸ்போர்ட்

## உத்ஸவ க்ரமம்

| | | | | |
|---|---|---|---|---|
| *14-8-98* | - | *இரவு* | - | *நந்தோத்ஸவம்* |
| *15-8-98* | - | *இரவு* | - | *ஶேஷ வாஹனம்* |
| *16-8-98* | - | *இரவு* | - | *ஸிம்ம வாஹனம்* |
| *17-8-98* | - | *இரவு* | - | *புன்னைமர வாஹனம்* |
| *18-8-98* | - | | - | *'ஏகாதஶீ'* |
| | | *இரவு* | | *கருட வாஹனம்* |
| *19-8-98* | - | *காலை* | - | *கோவிந்த பட்டாபிஷேகம்* |
| | | *இரவு* | - | *யானை வாஹனம்* |
| *20-8-98* | - | *இரவு* | - | *நிகுஞ்ஜோத்ஸவம்* |
| *21-8-98* | - | *இரவு* | - | *குதிரை வாஹனம்* |
| *22-8-98* | - | *இரவு* | - | *ஜானவாஸம்* |
| *23-8-98* | - | *காலை* | - | *திருக்கல்யாணம்* |
| | | *இரவு* | - | *'தெப்பம்'* |
| *24-8-98* | - | *காலை* | - | *விடையாற்றி* |

*தினமும் ப்ரவசனமும் கீர்த்தனமும் நடைபெறும்*

**மங்களானி பவந்து**


# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| வேணு:4 | ஆகஸ்ட் 1998 | கானம்:1 |
| --- | --- | --- |

மஹா ஸம்ப்ரோக்ஷணததன்று இரவு, கருடவாஹனத்தில்
உத்ஸவமூர்த்தி ஸ்ரீ சதுர்புஜ கோபாலன்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar